**சாதாரணக் கூட்டம்**

**கூட்ட எண் – 02/ 2022**

**திருத்தணி நகராட்சி,**
**நாள்: 15.03.2022**

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2052, பிலவ பங்குனி மாதம் 4–ஆம் நாள் (18.03.2022) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி அளவில் திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் நகர மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகர மன்ற தலைவர்**
**திருத்தணி நகராட்சி.**

**பொருள் எண்– 1**

திருத்தணி நகராட்சியின் ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் பிப்ரவரி மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம்

**பொருள் எண்– 2**

திருத்தணி நகராட்சியில் ஆணையரின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வந்த பொலிரோ வாகனம் LX TN 20 AD 6402 11.09.2006–ல் இந்நகராட்சி பேரூராட்சியாக இருக்கும் போது வாங்கப்பட்டது இது நாள் வரை பயன்பாட்டில் உள்ளது, வாகனம் வாங்கி 15 வருடங்களுக்கு மேல் ஆவதால் அடிக்கடி பழுது ஏற்படுகிறது உதிரி பாகங்கள் சந்தையில் கிடைக்காததால் பழுது பார்க்க மிகவும் சிரமாக உள்ளது, மேற்படி வாகனம் வாங்கி 15 ஆண்டுகளுக்கு மேல் ஆவதால் வாகனம் கழிவு நீக்கம் செய்ய நடவடிக்கை தொடர வேண்டியுள்ளது, எனவே புதியதாக பொலிரோ வாகனம் ஒன்று வாங்கவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதிக்கு பிரேரணையினை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.252/2022/இ1)

பொருள் எண்– 3

திருத்தணி நகராட்சியில் நகர மன்ற தலைவரின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வந்த பொலிரோ LX 2WD 7STR TN 20 BJ 3224 17.05.2012–ல் வாங்கப்பட்டது, வாகனம் வாங்கப்பட்டு 10 வருடங்கள் முடிவடையுள்ளது, மேலும் வாகனம் அடிக்கடி பழுது ஏற்படுவதாலும் உதிரி பாகங்கள் சந்தையில் கிடைக்காததால் பழுது பார்க்க மிகவும் சிரமாக உள்ளது, மேற்படி வாகனம் வாங்கி 10 ஆண்டுகள் முடிய உள்ளதால் வாகனம் கழிவு நீக்கம் செய்ய நடவடிக்கை தொடர வேண்டியுள்ளது, எனவே புதியதாக பொலிரோ வாகனம் ஒன்று வாங்கவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதிக்கு பிரேரணையினை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.252/2022/இ1)

பொருள் எண்– 4

திருத்தணி நகராட்சிக்கு அரசாணை (Ms) எண்.138 நாள்.27.12.2021–ல் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22–ன்கீழ் அம்மன் குளம் (சர்வே எண்.263/1) மேம்பாடு செய்ய ரூ.129.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது, அதன் அடிப்படையில் 11.02.2022–ல் இணையதளம் மூலமாகவோ அல்லது நேரிலோ ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கோரப்பட்டது, ஆனால் நகர்புற உள்ளாட்சி தேர்தல் – 2022 நன்னடத்தை விதி அமளில் இருந்ததால் 11.02.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் திறக்காமல் தேர்தல் நன்னடத்தை விதி 24.02.2022 அன்று முடிவடைந்த பிறகு நேரில் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட்டது அதன் பின் இணையதளம் மூலமாகவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட விவரம் கீழ் கண்டவாறு.

<u>கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் – 2021–22</u>

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.11 அம்மன் குளம் மேம்பாடு செய்தல் பணி (சர்வே எண்.263/1) | 129.00 | 1. திரு.C.N.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், மதிப்பீட்டை விட 0.61% குறைவு<br>2. திரு.எம். மூர்த்தி, ஒப்பந்ததாரர், மதிப்பீட்டை விட 0.50 % குறைவு |

அலுவலக குறிப்பு : –

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. செலவினத்தை கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் – 2021–22–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
4. மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் பிரசுரம் செய்தமைக்கான விளம்பர கட்டணத்தினை பொது நிதியில் செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1155/2021/இ1)

பொருள் எண்– 5

இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிக்கு 04.02.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சம்) | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி புதியபேருந்து நிலையம் அமைக்க கட்டிடம் கட்ட ஆலோசகர் நியனம் செய்து விரிவான திட்ட அறிக்கை, கட்டிட வரைபடம், கம்பி வரைபடம் மற்றும் மதிப்பீட்டு தயார் செய்து, மதிப்பீடு அறிக்கையினை TUFIDCO–ன் அனுமதி பெறவும், மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறும் பணி. | 6.00 | 1. Glancy Docmra Consultants India (P) Ltd., Madipakkam<br>0.20% மதிப்பீட்டை விட குறைவு<br>2. Eclat Designs & Infrastructure (P) Ltd., Porur.<br>0.50% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு : –

1. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் நிர்வாக அனுமதியினை எதிர் நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்– 6

திருத்தணி நகராட்சியில் 2022–23–ஆம் ஆண்டிற்கான கீழ்கண்ட பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் குழாய் மற்றும் மின் மோட்டார் 2022–2023–ம் ஆண்டிற்கு பராமரிப்பு பணி செய்தல் | 10.00 |
| 2. | நகராட்சியில் பகுதியில் ஆழ் துளை கிணற்று மின் மோட்டார் 2022–2023–ம் ஆண்டிற்கு பராமரிப்பு பணி செய்தல் | 5.00 |
| 3. | பொது சுகாதார பிரிவுக்கு தேவையான பொருட்கள் 2022–2023–ம் ஆண்டிற்கு சப்ளை செய்தல் | 5.00 |
| 4. | நகராட்சிக்கு தேவையான படிவங்கள் பதிவேடுகள், எழுது பொருட்கள் 2022–23ம் ஆண்டிற்கு சப்ளை செய்தல். | 5.00 |
| 5. | ஜே.சி.பி வாடகைக்கு சப்ளை செய்தல் | 5.00 |
| 6. | இந்நகராட்சியில் உள்ள கணினிகளை 2022 – 2023 ஆம் ஆண்டு பராமரிப்பு பணி செய்தல் | 3.00 |
| 7. | தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் பணி. | 5.00 |
| 8. | இந்கராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாயில் உள்ள மண் அடைப்புகளை நீக்கி, அப்புறப்படுத்தும் பணி. | 5.00 |
| 9. | பொது சுகாதரா பிரிவில் இயங்கும் 19 எண்ணிக்கையிலான சேமிப்பு மின் கலன் வாகனத்தில் (Battery Operator Vehicle) ஏற்படும் பழுதுகளை 2022–23–ஆம் ஆண்டிற்கு நீக்கம் செய்யும் பணி. | 9.90 |
| 10. | குளோரினேசன் இயந்திரத்திற்கு 2022-23-ம் ஆண்டிற்கு ஹைட்ரோ குளோரைடு திரவம் (Liquid Chlorine) சப்ளை செய்தல் பணி. | **5.00** |
| 11. | திருத்தணி ஏரியில் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்று மின் மோட்டார்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்தல் பணி. | **2.00** |
| 12. | இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகள் மற்றும் வணிக கட்டிடங்களுக்கு கதவு எண் எழுதும் பணி. | **3.00** |
| 13. | இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள தெரு மின் விளக்கு மின் கம்பங்களுக்கு எண் எழுதும் பணி. | **3.00** |
| 14. | திருத்தணி நகராட்சி நகர மன்ற கூடம் பராமரிப்பு பணி மற்றும் நகர மன்ற கூடத்திற்கு தேவையான மேசை மற்றும் நாற்காலிகள் சப்ளை செய்தல் பணி. | **9.90** |
| 15. | திருத்தணி நகராட்சி நகர மன்ற தலைவர் அறை, பார்வையாளர் அறை, உணவு அருந்தும் அறை மற்றும் கழிவறை பராமரிப்பு பணி மற்றும் நகர தலைவர் மற்றும் பார்வையாளர் அறைக்கு தேவையான மேசை மற்றும் நாற்காலிகள் சப்ளை செய்தல் பணி. | **9.90** |
| 16. | அருங்குளம் தலைமை நீரேற்று நிலையத்தில் குசஸ்தலை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள ஆழ்துளை கிணற்று மின் மோட்டார் கேபிள், நீருந்து குழாய்கள் வெள்ள பெருக்கினால் அடித்து செல்லப்பட்டது புதியதாக கேபிள், நீருந்து குழாய்கள் அமைத்தல் மற்றும் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல் பணி. | **5.00** |
| 17. | நகரின் எல்லையில் உள்ள பிரதான சாலைகளில் ஒளிரும் பெயர் பலகை (Digital Name board) பழுதடைந்துள்ள பெயர் பலகைகளை பழுது பார்த்தல் பணி | **2.00** |
| | **மொத்தம் ரூ** | **92.70** |

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.252/2022/இ1)

<u>பொருள் எண்–7</u>

திருத்தணி நகராட்சியில் கீழ் கண்ட பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ரயில் நிலையம் எதிரில் (அம்மா உணவகம் பின்புறம்) அரசு புறம்போக்கு இடத்தில் நகராட்சி மூலம் இரு சக்கர வாகனம் நிறுத்தம் ஏற்படுத்த வாகனம் நிறுத்தும் பந்தல் அமைத்தல் பணி. | 9.00 |
| 2 | வார்டு எண்.05, பலிஜாவாரி திருமண மண்டபத்தின் எதிரில் புதியதாக 2 கடைகள் கட்டுதல் பணி. | 4.00 |
| 3 | நகராட்சி அலுவலக பின்புறம் உள்ள கட்டிடம் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 9.90 |
| 4 | வார்டு எண்.2–ல் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் வினியோகம் செய்யும் பணி. | 3.00 |
| 5 | வார்டு எண்.5, குமரன் நகரில் மழை நீர் வடிகால்வாய் அமைத்தல் பணி. | 10.00 |
| 6 | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பொது மக்கள் பயன்பெறும் வகையில் புதியதாக குளிர் பதன சவப்பெட்டி (Freezer Box) இரண்டு எண்ணிக்கைகள் சப்ளை செய்தல் பணி. | 2.00 |
| 7 | தெருவிளக்கு தானியங்கி சுவிட்சுகள் புதியதாக வாங்கி பொருத்தும் பணி | 4.90 |
| 8 | வார்டு எண்.17, அரக்கோணம் சாலை சந்திப்பு முதல் ரயில்வே கேட் வரை உள்ள மழைநீர் வடிகால்வாய் மீது கவர் சிலாப் அமைத்தல் பணி. | 5.60 |
| | மொத்தம் ரூ | **48.4** |

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.252/2022/இ1)

பொருள் எண்– 8

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 கடித ந.க.எண்.27000/2021/WB, நாள்.02.03.2022–ல், நகராட்சிப் பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்யவும், அதற்கான விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. திருத்தணி நகராட்சிக்குட்பட்ட அனைத்து சாலைகள் மற்றும் தெருக்களில் உள்ள 1716 எண்ணிக்கையிலான LED விளக்குகளை மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.326.85 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி மற்றும் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு கோரி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பிரேரணையினை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.251/2022/இ1)

**பொருள் எண்– 9**

இந்நகராட்சியின் கீழ் கண்ட வாகனங்களுக்கு 2021–22, 2022–23–ஆம் ஆண்டுக்கான காப்பீட்டு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. TN 20AD 6402 பொலிரோ வாகனம்
2. TN 20BA 3405 அசோக் லைலாண்டு லாரி
3. TN 20B 9437 அசோக் லைலாண்டு லாரி
4. TN 20BJ 3224 பொலிரோ வாகனம்
5. TN 20BJ 6548 TATA Ace
6. TN 20CA 4542 Eicher
7. TN 20 CS 9327 TATA Ace
8. TN 20 CS 9284 TATA Ace
9. TN 20 CS 9316 TATA Ace
10. TN 20 CS 9326 TATA Ace
11. TN 20 CS 9358 TATA Ace
12. TN 20 CD 2196 TATA ACE (Doge Travelling Vehicle)

அலுவலக குறிப்பு :–

காப்பீட்டு நிறுவனம் நிர்ணயிக்கும் தொகையினை பொது நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்– 10**

இந்நகராட்சி கீழ் கண்ட வாகனஙகளுக்கு 2021–22, 2022–23–ஆம் ஆண்டிற்கு சாலை வரி மற்றும் பசுமை வரி (Green Tax) செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. TN 20AD 6402 பொலிரோ வாகனம்
2. TN 20BA 3405 அசோக் லைலாண்டு லாரி
3. TN 20B 9437 அசோக் லைலாண்டு லாரி
4. TN 20BJ 3224 பொலிரோ வாகனம்
5. TN 20BJ 6548 TATA Ace
6. TN 20CA 4542 Eicher
7. TN 20 CS 9327 TATA Ace
8. TN 20 CS 9284 TATA Ace
9. TN 20 CS 9316 TATA Ace
10. TN 20 CS 9326 TATA Ace
11. TN 20 CS 9358 TATA Ace

அலுவலகக் குறிப்பு :–

மோட்டார் வாகன ஆய்வாளர் நிர்ணயிக்கும் தொகையினை செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்– 11**

இந்நகரில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க துணை இயக்குநர் சுகாதார பணிகள், திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்.4588ப.தொ.3/14 நாள்.02.02.2015ல் 300 வீட்டிற்கு ஒரு நபர் என்ற வீதத்தில் இந்நகராட்சிக்கு 44 பணியாட்களை நியமித்து நகராட்சி பகுதிகளில் கொசு புழு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ளவும், எனவே 44 தற்காலிக கொசு புழு ஒழிப்பு பணியாளரை அமர்த்தி கொள்ள, மாவட்ட ஆட்சித்தலைவர் , திருவள்ளூர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட 2021–22ம் ஆண்டுக்கான மாவட்ட தினக்கூலி பணியாளர்கள் விலைவிகிதத்திலேயே நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.378/– வீதம் 44 நபர்களை டெங்கு காய்ச்சல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் மூலம் பணியாட்களை சப்ளை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.30.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண்– 12**

திருத்தணி நகராட்சியில் கீழ் கண்ட பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தெக்களூர் சாலை, புதியதாக கட்டப்பட உள்ள பல்நோக்கு கட்டிடத்தின் முன்புறம் சிறுபாலம் அமைத்தல் பணி. | 2.00 |
| 2 | டி–புதூர் சுடுகாடு செல்லும் சாலைக்கு தடுப்பு சுவர் அமைத்தல் பணி. | 9.90 |
| 3 | வார்டு எண்.15, பெரிய தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி மேட்டு தெரு, அரசு பொது மருத்துவமனை அருகில் புதியதாக சிறுபாலம் அமைத்தல் பணி. | 3.00 |
| 4 | பெரியார் நகர் பகுதியில் மழை நீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 2.30 |
| 5 | வார்டு எண்.5, செங்கல்வராயன் தெரு பலிஜாவாரி திருமண மண்டபம் அருகில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி. | 0.75 |
| 6 | வார்டு எண்.15, ஆறுமுகசாமி கோயில் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி. | 1.00 |
| 7 | வார்டு எண்.17, மேட்டுத் தெரு, அரக்கோணம் சாலை சந்திப்பு முதல் இரயில் வே கேட் வரை பேவர் பிளாக் அமைத்தல் பணி. | 5.70 |
| | மொத்தம் | 24.65 |

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண்– 13**

நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அலுவலகத்திற்கு புதியதாக பிரேரணைகள் சமர்ப்பிக்கும் போது நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் மேற்கொள்ளவும் மேலும் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு மடி கணினி (Laptop) சப்ளை செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.90,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1) அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் மூலம் ஜெம் விலை விகிதத்திலேயே வாங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.252/2022/இ1)

<u>பொருள் எண். 14</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான அருங்குளம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 75 KVA ஜெனரேட்டரில் அடிக்கடி பழுது ஏற்படுகிறது, இதனால் மின் வாரியத்தால் பராமரிப்பு பணி மேற்கொள்ளும் போது பொது மக்களுக்கு தடையில்லாமல் குடிநீர் வழங்குவது தடைபடுகிறது எனவே 75 KVA ஜெனரேட்டர் பழுதினை நீக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.90,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : –

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.252/2022/இ1)

<u>பொருள் எண். 15</u>

திருத்தணி நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியில் மொத்தம் 21 வார்டுகள் உள்ளன. இந்நகராட்சியின் பரப்பளவானது 12.42 சதுர கி.மீ கொண்டதாகும். 2011 ஆம் ஆண்டின் மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 44781 ஆகும். இந்நகராட்சி பகுதியில் அறுபடை வீடுகளில் ஒன்றான அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளதால், நாள்தோறும் வெளிமாவட்டங்கள் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந்நகருக்கு வந்து சென்றபின்னர், மேலும் இந்நகரில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் படி பஜனை திருவிழாவும், ஆகஸ்ட்டு மாதம் ஆடி கிருத்திகை திருவிழாவும் நடைபெறும். இத்திருவிழாவிற்கு லட்ச கணக்காக பக்தர்கள் இத்திருகோவிலுக்கு வருகை தருவார்கள் எனவே இப்புகழ்வாய்ந்த திருக்கோவில் அமைந்துள்ள நகரினை அழகுபடுத்த நகராட்சியின் கீழ் கண்ட நான்கு சாலைகளின் எல்லைகளில் அழகிய RCC நுழைவு வாயில்கள் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. சென்னை சாலை
2. திருப்பதி சாலை
3. அரக்கோணம் சாலை
4. சித்தூர் சாலை

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையில் அமைய உள்ளதால் நெடுஞ்சாலை துறையின் மூலம் நுழைவு வாயில்கள் அமைக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.253/2022/இ1)

<u>பொருள் எண்–16</u>

திருத்தணி நகராட்சிக்கு அரசாணை எண்.600 ஆர்.டி. & எல்.ஏ. நாள்: 25.07.1985ன்படி பேரூராட்சியாகவும், அரசாணை எண்.142 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 31.05.1994ன்படி திருத்தணி நகரியமாகவும் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வந்தது. அரசாணை எண்.300 நாள்.24.08.2004ன்படி மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அரசாணை எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 09.08.2010ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவ்வலுவலக கட்டிடம் 14.09.1953–ல் கட்டப்பட்ட கட்டிடம், 70 வருடங்கள் கடந்த பழமையான கட்டிடமாகும். தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு வளர்ந்து வரும் நகரமாகவும், நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் உட்புற மற்றும் வெளிப்புற பணியாளர்கள் அலுவலகத்தில் பணிபுரிய போதுமான இட வசதி இல்லாததாலும் மிகவும் சிரமம் ஏற்படுகிறது, மேலும் பொது மக்கள் நகராட்சி அலுவலகத்திற்கு வரும் போது போதிய இட வசதி இல்லாததால் பொது மக்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

தற்போது புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர மன்ற உறுப்பினர்களுக்கு நகர மன்ற கூடம் மற்றும் நகர மன்ற தலைவருக்கு போதுமான அறை இல்லாததாலும், ஏற்கனவே உள்ள மிக பழமையான அலுவலக கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி புதியதாக அலுவலக கட்டிடம் கட்ட கலந்தாலோசகர் நியமனம் செய்து கட்டிட வரைபடம், கம்பி வரைபடம் மற்றும் மதிப்பீடு தயார் செய்ய வழங்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.253/2022/இ1)

<u>பொருள் எண்–17</u>

இந்நகராட்சி 16–வது வார்டு உறுப்பினர் திருமதி.அ.சண்முகவள்ளி ஆறுமுகம் அவர்கள் தனது மனுவில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட T-புதூர் பகுதி மக்கள் நந்தி ஆறுக்கு அருகில் பயன்படுத்தி வரும் சுடுகாட்டிற்கு சென்று வர போதிய சாலை வசதி இல்லாததால் தனியாருக்கு சொந்தமான பட்டா நிலத்தின் வழியாக இறந்தவர்களின் உடலை எடுத்து செல்வதில் சிரமமாக உள்ளதாகவும், மேலும் மழை காலங்களில் T-புதூர் ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீர் சாலையை கடந்து நந்நி ஆறுக்கு செல்லும் சமயத்தில் உடல்களை எடுத்து செல்வதில் மிகவும் சிரமமாக உள்ளதாலும் T-புதூர் மெயின் ரோட்லிருந்து நந்தி ஆற்றங்கறையில் உள்ள சுடுகாட்டிற்கு செல்ல சாலை வசதி ஏற்பாடு செய்து தருமாறு கோரியுள்ளார்.

நகர் மன்ற உறுப்பினரின் கோரிக்கையின் பேரில் இடம் ஆய்வு செய்யப்பட்டது, திருத்தணி T-புதூரில் இருந்து கீழாந்தூருக்கு செல்லும் சாலையின் வடக்கு பக்கம், திருத்தணி கிராமம், புல எண்.187/3A1–க்கு வடக்கு பக்கம் நந்தி ஆற்றங்கறையில் சுடுகாடு உள்ளது, மேற்படி சுடுகாட்டிற்கு தனியாருக்கு சொந்தமான பட்டா நிலம் வழியாக மட்டுமே செல்ல முடியும். இது நாள் வரை T-புதூர் மக்கள் அந்த வழியாகதான் சுடுகாட்டிற்கு சென்று வருகின்றனர், மேற்படி தனியார் நிலத்தின் ஒரு பகுதியை சாலை பயன்பாட்டிற்கு என கையகப்படுத்தினால் அல்லது மேற்படி இடத்தை தனியாரால் நகராட்சிக்கு தானதாக ஒப்படை செய்தால் மட்டுமே அங்கு சாலை வசதி செய்து கொடுக்க இயலும், இந்நிலையில் மேற்படி இடத்தின் ஒரு பகுதியை 466.00 சதுர மீட்டர் சாலை பயன்பாட்டிற்காக வழங்க கோரி நிலத்தின் உரிமையாளாரான திரு.பி.எஸ்.ரவி என்பவரின் இசைவு கோரப்பட்டது. திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட திருத்தணி கிராமம் புல எண்.187/3A1–ன் உரிமையாளர் திரு.பி.எஸ்.ரவி என்பவர் தனக்கு சொந்தமான இடத்தில் 466.00 சதுர மீட்டர் பகுதியை (வரைபடத்தில் கண்டுள்ளபடி) நகராட்சிக்கு தானமாக வழங்க இசைவு அளித்துள்ளார். எனவே பொது மக்களின் நலன் கருதி மேற்படி இடத்தினை தனியாரிடமிருந்து தான பத்திரம் மூலம் நகராட்சிக்கு பெயருக்கு பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு : -</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.255/2022/எப்1)

<u>பொருள் எண்–18</u>

இந்நகராட்சி 16–வது வார்டு உறுப்பினர் திருமதி.அ.சண்முகவள்ளி ஆறுமுகம் அவர்கள் தனது மனுவில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜோதி நகர் பகுதி பொது மக்கள் பயன்படுத்தி

வரும் சுடுகாட்டிற்கு சென்று வர போதிய சாலை வசதி இல்லாததால் தனியாருக்கு சொந்தமான பட்டா நிலத்தின் வழியாக இறந்தவர்களின் உடலை எடுத்து செல்வதில் சிரமமாக உள்ளதாகவும், மேலும் மழை காலங்களில் ஜோதி நகர் ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீரால் இறந்தவர்களின் உடல்களை எடுத்துச் செல்வதில் மிகவும் சிரமமாக உள்ளதாலும் ஜோதி நகர் பகுதியில் இருந்து சுடுகாட்டிற்கு செல்ல சாலை வசதி ஏற்பாடு செய்து தருமாறு கோரியுள்ளார்.

நகர் மன்ற உறுப்பினரின் கோரிக்கையின் பேரில் இடம் ஆய்வு செய்யப்பட்டது, ஜோதி நகர் பகுதி பொது மக்கள் பயன்படுத்தி வரும் சுடுகாட்டிற்கு சென்று வர போதிய சாலை வசதி இல்லாததால் தனியாருக்கு சொந்தமான பட்டா நிலத்தின் வழியாக இறந்தவர்களின் உடலை எடுத்து சென்று வருகின்றனர். இந்நிலையில் மேற்படி சுடுகாட்டிற்கு செல்ல அரசு புறம்பரோக்கு இடங்கள் உள்ளதா என வட்டாட்சியர் அலுவலக நில அளவையர் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது, ஆய்வில் அரசு புறம்போக்கு இடங்கள் ஏதும் இல்லை எனவும், திருத்தணி கிராமம் புல எண்.235/7, 235/10 மற்றும் 235/11–ல் உள்ள தனியாருக்கு சொந்தமான பட்டா நிலங்களில் ஒரு பகுதியான 95.00 ச.மீட்டர் பரப்பளவு இடத்தினை சாலைக்கு என கையகப்படுத்துதல் அல்லது தானமாக பெற்றால் மட்டுமே சாலை வசதி செய்ய இயலும் என நில அளவையரால் தெரிவிக்கப்பட்டது, இதனை தொடர்ந்து பட்டா நிலத்தின் உரிமையாளர்களான 1) திருமதி.முனியம்மாள், க/பெ.சுப்பிரமணி 2) திரு.சந்திரன், த/பெ.சுந்தரம் மற்றும் 3) திரு.மேகவர்ணம் த/பெ.முனுசாமி ஆகியோருக்கு தங்களது பட்டா இடதத்தின் ஒரு பகுதியை சாலை பயன்பாட்டிற்கு என நகராட்சிக்கு வழங்குவது குறித்து இசைவினை அளிக்க கோரி இவ்வலுவலகம் மூலம் 07.03.2022–ந் தேதி கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி நிலத்தின் உரிமையாளர்களும் 09.03.2022–ந்தேதிய கடிதம் வாயிலாக பட்டா இடத்தின் ஒரு பகுதியை சாலை பயன்பாட்டிற்காக நகராட்சிக்கு தானமாக வழங்க தங்களது இசைவினை அளித்துள்ளனர், எனவே பொது மக்களின் நலன் கருதி சாலை வசதிக்காக மேற்படி இடத்தினை தனியார் இடமிருந்து தான பத்திரம் மூலம் நகராட்சிக்கு பெயருக்கு பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | உரிமையாளரின் பெயர் | தானமாக வழங்கப்படும் நிலத்தின் விவரம் | பரப்பளவு (ச.மீட்டர்) |
|---|---|---|---|
| 1 | திருமதி.முனியம்மாள், க/பெ.சுப்பிரமணி | திருத்தணி கிராமம், புல எண்.235/7 | 21.00 |
| 2 | திரு.சந்திரன், த/பெ.சுந்தரம் | திருத்தணி கிராமம், புல எண்.235/10 | 31.00 |
| 3 | திரு.மேகவர்ணம் த/பெ.முனுசாமி | திருத்தணி கிராமம், புல எண்.235/11 | 43.00 |
| | | மொத்தம் | 95.00 |

<u>அலுவலக குறிப்பு : -</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.256/2022/எப்1)

<u>பொருள் எண்–19</u>

நகராட்சி நிர்வாகம் இயக்குநர், சென்னை -28 அவர்களின் 08.03.2022–ம் தேதிய கடிதம் ந.க.எண்.5094/2022/டிபி2–ல் தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும்

திறந்தவெளி இடங்கள் ( பாதுகாப்பு மற்றும் முறைப்படுத்துதல் ) சட்டம் 1959, பிரிவு 3-ன்படி உள்ளாட்சி எல்லைக்குள் அமைந்துள்ள பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி இடங்களின் சரியான மற்றும் முழுமையான பட்டியலை அவற்றின் நிலவரைப் படிவம் மற்றும் வரைப்படங்களுடன் தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு சமர்பிக்க வேண்டும் எனவும், அத்தகைய பட்டியல்கள் அரசால் தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி இடங்கள் (பாதுகாப்பு மற்றும் முறைப்படுத்துல் ) சட்டம் 1959, பிரிவு 4(1) மற்றும் 4(3) வரையிலான பிரிவுகளின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட வேண்டியுள்ளதால், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு மற்றும் நகர் ஊரமைப்பு துறை மூலம் கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் உள்ள பூங்காக்கள், சிறுவர் விளையாடுமிடம் மற்றும் திறந்தவெளி இடங்களை இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளப்படி அரசிதழில் வெளியிட அரசுக்கு உரிய வழி முறையாக அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**THIRUTHANI MUNCIPALITY**

**List of Parks,Playfields and Open spaces to be published**

| S. No | Use / Name of | | | Name of open space | Location survey Ward No. & T.S.No. | Extent in (Acre / Sqft) | Owership ULB / Private | Present Use & Condition | Accessibility | Suitability | Upkeep and Maintenance | If already notified, Mention the GO details | Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Parks | Playfields | Open spaces | | | | | | | | | | |
| 1 | Mangalakizhar Nagar | - | - | - | 39/11,12,13,14 B,14D of Amirthapuram Village | 12974 Sq ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 2 | Mangalakizhar Nagar | - | - | - | 49/1A,3,4 of Amirthapuram Village | 0.47 Acres | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 3 | Murugappa nagar | - | - | - | 360/7, 361/part, 362/ part of Thiruthani Village | 0.42 Acres | ULB | P.U Primary school | Yes | Yes | - | - | - |
| 4 | Sekar verma nagar | - | - | - | 312/pt, 319/part, 319/part of Thiruthani Village | 0.06 Acres | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 5 | | - | Sekar verma nagar | - | 312/pt, 319/part, 319/part Thiruthani Village | 0.05 acres | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 6 | Gandhi nagar | - | - | - | 87/part, 88/part, 89/part of Amirthapuram Village | 22624 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 7 | | **Gandhi nagar** | - | - | 87/part, 88/part, 89/part of Amirthapuram Village | 17280 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | T-Pudhur Road | - | - | - | 241/1B/242/2B of Thiruthani Village | 0.066 acres | ULB | P.U Primary school | Yes | Yes | - | - | - | - |
| 9 | | **T-Pudhur Road** | - | - | 241/1B/242/2B of Thiruthani Village | 0.025 acres | ULB | Vacant | Yes | Yes | - | - | - | - |
| 10 | | - | T-Pudhur Road | - | 241/1B/242/2B of Thiruthani Village | 0.017 acres | ULB | Vacant | Yes | Yes | - | - | - | - |
| 11 | Diwan Bahadur Bolini | - | - | - | 345/part, of Thiruthani Village | 0.40 acres | ULB | Park | Yes | Yes | Maintained by ULB | - | - | |
| 12 | Adi Sankarar Nagar | - | - | - | 352, Part Amirthapuram Village | 31441 Sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - | |
| 13 | PMS Nagar | - | - | - | 40/11B,40/12 Thiruthani Village | 0.477 acres | ULB | P.U Primary school & Vacant | Yes | Yes | - | - | - | |
| 14 | Variyar Nagar | - | - | - | 308 part Thiruthani Village | 22472 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - | |
| 15 | DTCP No.16/2021 | - | - | - | 118/1A,118/123,120/Part Amirthapuram Village | 1244.60 sqft | ULB | Vacant | Yes | Yes | - | - | - | |
| 16 | DTCP No.16/2021 | - | - | - | | 766.64 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - | |
| 17 | Subramaniapuram | - | - | - | 270/11A1A1A1 of Thiruthani Village | 0.096 Acres | ULB | Vacant | Yes | Yes | - | - | O.S.No.60/2016 District Munisiff | |
| 18 | 253(R)/2019 | - | - | - | 144/12,144/13, 147/14,15,16 Thiruthani Village | 10918 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - | |
| 19 | 024(R)/2019 | - | - | - | 149/1 Thiruthani Village | 1361 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - | |
| 20 | 024(R)/2019 | - | - | - | 149/1 Thiruthani Village | 847 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - | |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21 | Sakthi Sai Nagar | - | - | - | 266/part Thiruthani Village | 1203 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 22 | 402(R) / 2019 | - | - | - | 301/10part Thiruthani Village | 232 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 23 | 218(R) /2018 | - | - | - | 56/2,3Amirthapuram Village | 1403 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 24 | 225(R)/ 2018 | - | - | - | 58/part 80/part,81/part,85/part,86/part, Amirthapuram Village | 3861 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 25 | 225(R)/ 2018 | - | - | - | | 1208 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 26 | 225(R)/ 2018 | - | - | - | | 5581 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 27 | 225(R)/ 2018 | - | - | - | | 2880 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 28 | 225(R)/ 2018 | - | - | - | | 5803 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 29 | 222(R)/ 2018 | - | - | - | 56/1B,1C, Amirthapuram Village | 890 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 30 | 222(R)/ 2018 | - | - | - | 56/1B,1C, Amirthapuram Village | 878 sp.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 31 | 030(R) 2015 | - | - | - | 23/9part 23/15 Amirthapuram Village | 495 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 32 | 030(R) 2015 | - | - | - | 23/9part 23/15 | 693 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 33 | 355(R) 2018 | - | - | - | 14/Part 15 Part Thiruthani Village | 8245 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 34 | 219(R)2018 | - | - | - | 62/12APart, 12BPart, 16Part Thiruthani Village | 676 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 35 | 221( R ) /2018 | - | - | - | 61/Part,62/1,2 Part Amirthapuram Village | 1543 sqft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 36 | 221( R ) /2018 | - | - | - | 61/Part,62/1,2 Part | 798 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 37 | Vetrivel Nagar | - | - | - | 30/part Amirthapuram Village | 2100 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 38 | Vetrivel Nagar | - | - | - | 30/part Amirthapuram Village | 4030 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 39 | Vetrivel Nagar | - | - | - | | 1200 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 40 | Vetrivel Nagar | - | - | - | | 1047sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 41 | Vetrivel Nagar | - | - | - | | 1049 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 42 | 265 ( R) /2018 | - | - | - | 86/3,357/part,360/part Thiruthani Village | 699 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 43 | 266 ( R ) 2018 Kumaran Nagar | - | - | - | 75/Part,76/Part Thiruthani Village | 1578 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 44 | 266 ( R ) 2018 (Kumaran Nagar ) | - | - | - | 75/Part,76/Part | 3763 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 45 | 347 (R) 2019 | - | - | - | 115/2A,2B Amirthapuram Village | 1155 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 46 | 019(R ) /2019 | - | - | - | 38/1A1,1A2,1A3,1A4 Amirthapuram Village | 1160 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 47 | 018 ( R ) /2019 | - | - | - | 73/part Amirthapuram Village | 1848 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 48 | 08 ( R) /2021 | - | - | - | 257/Part,267/Part Thiruthani Village | 6677 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 49 | 08 ( R) /2021 | - | - | - | | 7421 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 50 | 358 (R ) /2019 | - | - | - | 291/Part, 292/part Thiruthani Village | 285 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 51 | 358 (R ) /2019 | - | - | - | | 502 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 52 | 358 (R ) /2019 | - | - | - | | 861 sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 53 | 358 (R ) /2019 | - | - | - | 291/Part, 292/part Thiruthani Village | 6085sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 54 | 358 (R ) /2019 | - | - | - | | 8845sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |
| 55 | 358 (R ) /2019 | - | - | - | | 4505sq.ft | ULB | Vacant | Yes | Yes | - | - | - |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அரசிதழில் வெளியிட ஆகும் செலவினத்தை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1863/2016/எப்1)

<u>பொருள் எண்–20</u>

இந்நகராட்சி பொது சுகதாரப் பிரிவில் இயங்கி வரும் கீழ் கண்ட வாகனங்களுக்கு தகுதிச் சான்று பெறுவதற்கு, வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய ஆகும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. TN 20BJ 6548 TATA Ace
2. TN 20 CS 9327 TATA Ace
3. TN 20 CS 9284 TATA Ace
4. TN 20 CS 9316 TATA Ace
5. TN 20 CS 9326 TATA Ace
6. TN 20 CS 9358 TATA Ace
7. TN 20 CD 2196 TATA Ace

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

<u>பொருள் எண்–21</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டுத் தெருவில் உள்ள ரயில்வே கேட் மூடும் போது இரு சக்கர வாகனங்கள் தர்மராஜா கோயில் தெருவில் உள்ள ரயில்வே சிறுபாலத்தின் கீழ் சென்று வருகிறது, தற்போது அந்த பாலத்தின் கீழ் செல்லும் மழை நீர் மற்றும் கழிவு நீர் அடைப்பு ஏற்பட்டு தண்ணீர் தேங்கி நிற்கிறது இதனால் பொது மக்கள் அவ்வழியாக செல்ல முடியாமல் உள்ளது, மேலும் ரயில்வே கேட் மூடும் போது கேட் முன்புறம் வாகன நெரிச்சல் ஏற்பட்டு பொது மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர், எனவே ரயில்வே சிறுபாலத்திற்கு முன்பு கழிவு நீர் சேகரிப்பு தொட்டி அமைத்து, நீர் மூழ்கி மின் மோட்டார் மூலம் கழிவு நீரை வெளியேற்றவும், அதற்கான மின் இணைப்பு பெறவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு ரூ.4.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.252/2022/இ1)

<u>பொருள் எண்–22</u>

திருத்தணி நகராட்சி அரசாணை எண்.600 ஆர்.டி. & எல்.ஏ. நாள்: 25.07.1985ன்படி பேரூராட்சியாகவும், அரசாணை எண்.142 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.05.1994ன்படி திருத்தணி நகரியமாகவும் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வந்தது. அரசாணை எண்.300 நாள்.24.08.2004ன்படி மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. பின்பு அரசாணை எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 09.08.2010ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசாணை (நிலை) எண்.238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.02.12.2008–ல் நகராட்சிகளின் வகைபாடுட்டினை நிர்ணயம் செய்யும் விதிகள் 2008 [(Norms for Classification of Municipalities) Rules 2008]–ன் விதி எண்.3–ல் சராசரி ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் நகராட்சிகளின் தரத்தினை கீழ் குறிப்பிட்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| Sl.no | Grade | Average Annual Income |
|---|---|---|
| 1 | Special Grade Municipality | Exceeding rupees ten crores |
| 2 | Selection Grade Municipality | Exceeding rupees six crores and not exceeding rupees ten crores |
| 3 | First Grade Municipality | Exceeding rupees four crores and not exceeding rupees six crores |
| 4 | Second Grade Municipality | Not exceeding rupees four crores |

இந்நகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு உள்ளது

| வருவாய் ஆண்டு | ஆண்டு வருமானம் (ரூ.கோடியில்) |
|---|---|
| 2019– 2020 | **4.92** |
| 2020– 2021 | **5.30** |
| 2021 – 2022 | **6.21** |

இந்நகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் 4.00 கோடிக்கு மேல் உள்ளதால் மேற்படி அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி இந்நகராட்சியினை இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்த உரிய வழிமுறையாக அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு : -</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்